


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.07.2016) நடைபெற்றது. துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 469/2016 நாள்: 22.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (22.07.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படுவதுடன், குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் கடந்த மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 51 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 29 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 180 என மொத்தம் 260 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

மீனவர் இலவச வீடுகள் கட்டும் திட்டமானது அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் போது, உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில், அவ்விண்ணப்பம் அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, பரிசீலனை செய்யப்படும் எனவும், கடல்சார் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரை கிராமங்களில் அமைப்பது குறித்த கருத்துரு மீன்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது எனவும், பொருளில் கண்ட விடயமாக கருத்துரு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது எனவும், உள்நாட்டு மீன்வர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது என்பது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என தனியாக செயல்படுத்த இயலாது. தமிழ்நாடு முழுவதும் ஒரே போன்று திட்டம் செயல்படுத்த வேண்டியுள்ளதால் இது தொடர்பாக மீன்துறை ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி ஆணை பெறபட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், சுனாமி குடியிருப்பு செல்லும் சாலை கனரக பயணிகள் பேரூந்து இலகுவாக சென்று திரும்புவதற்கு உகந்ததாக இல்லை. தற்போது குறும்பனை முக்கிய சாலை வழியாக தேவையான பேரூந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இவற்றை முழுமையாக பயன்படுத்தலாம எனவும், ஏழுதேசம் பேரூராட்சி பகுதியிலுள்ள தூத்தூர் ஊராட்சி பகுதியை இணைக்கும் ஏ.வி.எம் சானலின் இணைப்பு சாலை பணி மேற்கொள்ள இப்பேரூராட்டசி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இராஜாக்கமங்கலம் துறை இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து, தேவையான குறிப்புகள் மற்றும் அளவுகள் எடுத்து மதிப்பீடு தயார் செய்து, அரசிற்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி, அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.